செ.வெ.எண்:85 நாள்:28.06.2021

**கோயம்புத்தூர் மாவட்டம்**

# இ.எஸ்.ஐ மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் ஆக்ஸிஜன் உற்பத்தி நிலையங்களை மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு.கா.ராமச்சந்திரன் அவர்கள் திறந்து வைத்தார்.

---

கோயம்புத்தூர் மாவட்டம், இ.எஸ்.ஐ மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் தனியார் நிறுவன பங்களிப்புடன் (எல் **&** டி நிறுவனம்) 1000 லிட்டர் ஆக்ஸிஜன் உற்பத்தி நிலையம் மற்றும் தனியார் பங்களிப்புடன் (கூகுள் நிறுவனம்) 400 லிட்டர் ஆக்ஸிஜன் உற்பத்தி நிலையம் ஆகிய இரண்டு ஆக்ஸிஜன் உற்பத்தி நிலையங்களை இன்று(28.06.2021) மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு.கா.ராமச்சந்திரன் அவர்கள் திறந்து வைத்தார். இந்நிகழ்வின்போது, மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.ஜி.எஸ்.சமீரன் இ.ஆ.ப., இ.எஸ்.ஐ மருத்துவகல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.ரவீந்திரன், எல்&டி நிறுவன திட்ட மேலாளர் திரு.ராஜாசுரேஷ் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**பின்னர் மாண்புமிகு வனத்துறை அமைச்சர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது,**

கொரோனா தொற்று இரண்டாவது அலை பரவல் அனைத்து பகுதிகளில் அதிகளவில் ஏற்பட்டு வந்த நிலையில், **மாண்புமிகு தமிழ்நாடு முதலைமச்சர் அவர்கள்** மேற்கொண்ட போர்கால நடவடிக்கைகளின் பயனாக தற்போது தொற்று பரவல் வெகுவாக குறைந்துள்ளது.

கோயம்புத்தூர் மாவட்டத்தில் இ.எஸ்.ஐ மருத்துவகல்லூரி மருத்துவமனையில் 1000 நபர்களுக்கும் மேல் சிகிச்சை பெற்று வந்தநிலையில், தற்போது 310 நபர்கள் மட்டுமே சிகிச்சையில் உள்ளனர்.

இதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், அரசின் விதிகளை பின்பற்றி தொற்றுபரவல் கட்டுக்குள் வருவதற்கு ஒத்துழைப்பு வழங்கிய மக்களும் என் நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

கோயம்புத்தூர் இ.எஸ்.ஐ மருத்துவக்கல்லூரி மருத்துவமனை, 1082 படுக்கைகளுடன் கொரோனா தொற்றுக்கு சிகிச்சையளித்து வரும் பிரத்யேக மருத்துவமனையாக செயல்பட்டு வருகின்றது.

கோயம்புத்தூர் மட்டுமல்லாது, அண்டை மாவட்டங்களிலிருந்து கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டு சிகிச்சைக்கு வந்த ஆயிரக்கணக்கானோர், இங்கு அளிக்கப்பட்ட சிறப்பான சிகிச்சையின் பயனாக பூரண குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், அர்ப்பணிப்புடன் பணியாற்றி வரும் மருத்துவர்கள் மற்றும் செவிலியர்களுக்கு ஊக்கம் அளிக்கும் வகையில் இ.எஸ்.ஐ மருத்துவமனைக்கு நேரில் வருகை தந்தது, முழுகவச உடையணிந்து தீவிர சிகிச்சை பிரிவில் நேரடியாக சென்று ஆய்வு மேற்கொண்டதுடன், சிகிச்சை பெற்று வருபவர்களிடம் நலம் விசாரித்து ஆறுதல் கூறினார்கள்.

மேலும், இம்மருத்துவமனைக்கு தேவைப்படும் அனைத்து மருத்துவ கட்டமைப்பு வசதிகளும் ஏறப்படுத்தப்பட்டு வருகின்றது. அதன் ஒருபகுதியாக இன்று ரூ.2.35 கோடி மதிப்பீட்டில் தனியார் நிறுவன பங்களிப்புடன் (எல் & டி நிறுவனம்) 1000 லிட்டர் ஆக்ஸிஜன் உற்பத்தி நிலையம் மற்றும் ரூ.70இலட்சம் மதிப்பீட்டில் தனியார் பங்களிப்புடன் (கூகுள் நிறுவனம்) 400 லிட்டர் ஆக்ஸிஜன் உற்பத்தி நிலையம் பயன்பாட்டிற்கு துவக்கி வைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் ஆக்ஸிஜன் உற்பத்தி செய்து, ஒரே நேரத்தில் சுமார் 280 நபர்களுக்கு ஆக்ஸிஜனுடன் சிகிச்சை அளிக்கமுடியும்.

ஏற்கனவே இம்மருத்துவமனையில் உள்ள 1082 படுக்கைகளில் 783 ஆக்ஸிஜன் படுக்கை வசதிகள், 199 சாதாரண படுக்கை வசதிகள் மற்றும் தீவிர சிகிச்சை பிரிவில் 100 ஆக்ஸிஜன் வசதியுடன் கூடிய படுக்கை வசதிகள் உள்ளன.

இன்று துவக்கி வைக்கப்பட்டுள்ள ஆக்ஸிஜன் உற்பத்தி நிலையங்களின் மூலம் இம்மருத்துவமனையில் மீதமுள்ள அனைத்து சாதாரணப்படுக்கைகளுக்கு, ஆக்ஸிஜன் வசதியுடன் கூடிய சிகிச்சை அளிக்கமுடியும். என மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு.கா.ராமசந்திரன் அவர்கள் தெரிவித்தார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கோயம்புத்தூர்.**